| உறுதிமொழி # 11: தேசிய சுற்றுச்சூழல் கொள்கையில் காலநிலை மாற்ற சவால்கள் முழுமையான உள்ளீர்க்கப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான அமைச்சினால் பங்கேற்பு முறையில் செயற்படல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **சுற்றாடல் அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | கடந்த ஒரு தசாப்த காலமாக மிகவும் மோசமான வானிலையை இலங்கை எதிர்கொண்டு வருகின்றது. நீடித்த வரட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் என்பன முக்கியமாக அம்சங்களாக மாறியுள்ளதுடன், காலத்தில் அதிகரித்தும் உள்ளன. நாடு முழுவதிலும் காலநிலை சார்ந்த அனர்த்தங்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன. அனர்த்த அபாயம் கொண்ட மாவட்டங்களிலும், கிராமப்புற விவசாய மக்கள் தொகையிலும் வறிய குடும்பங்கள் குறிப்பாக பாதிக்கப்படுகின்றன.உயிர் மற்றும் வாழ்வாதார இழப்பு, சொத்து சேதம் மற்றும் இடப்பெயர்வு என்பன, இடைக்கால மற்றும் நீண்ட கால அபிவிருத்தி திட்டங்களின் செலவாக நிவாரண மற்றும் மீட்சி முயற்சிகளுக்காக செலவிடப்படும் அரசாங்க நிதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்ற அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படாமையினால் பொருத்தமற்ற திட்டமிடல் செயற்பாடுகளினால் இவற்றில் சில அனர்த்தங்கள் இடம்பெறுகின்றன. தற்போதுள்ள தேசிய சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் சட்டம் என்பன போதியளவில் காலநிலை மாற்ற கரிசனைகளை கவனத்தில் கொள்வதில்லை. |
| உறுதிமொழி என்ன? | நாட்டின் தேசிய சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் சட்டத்தில் காலநிலை மாற்ற அம்சங்களை குறிப்பாக அடையாளப்படுத்துவதும்,காலநிலை மாற்ற உள்வாங்கல் மற்றும் தணித்தலுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதுமே இந்த உறுதிமொழியின் நோக்கமாகும்.சுற்றுச் சூழலுக்கு பொறுப்பான அமைச்சானது மீளாய்வு செய்வதற்கு அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாய்வு செய்து, காலநிலை மாற்ற அம்சங்களை அடையாளப்படுத்துவதற்கும், காலநிலை மாற்ற உள்வாங்கல் மற்றும் தணித்தலுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் தற்போதுள்ள சுற்றுச் சூழல் கொள்கை மற்றும் சட்டத்தை திருத்தும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | தற்போதுள்ள தேசிய சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் சட்டம் என்பன போதியளவில் காலநிலை மாற்ற கரிசனைகளை கவனத்தில் கொள்ளாமையை அங்கீகரித்து, முழுமையாக காலநிலை மாற்ற விடயங்களை அடையாளப்படுத்துவதற்கு உதவும் வகையில் திருத்துவதற்கு இந்த உறுதிமொழி பொறுப்பேற்கும். காலநிலை மாற்றத்தின் அபாயங்கள் காரணமாக,வறியவர்கள் மற்றும் பலவீனமாவர்கள் மீதான தாக்கத்தை குறைக்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவத்திற்கான உயர் மட்ட கொள்கை முன்னுரிமைப்படுத்தலை இது வழங்கும். மேலும், நெருக்கடிகளை கடப்பதற்கும், அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்குமான வழிகளை தீர்மானிப்பதற்குகுறுகிய, இடை மற்றும் நீண்ட காலங்களில் காலநிலையானது எவ்வாறு மாற்றம் பெறும் என்பது குறித்து திட்டமிடல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் ஈடுபட்டுள்ளோர் அறிந்திருக்க வேண்டும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | தமது வாழ்க்கையை பாதிக்கும் அரசாங்க தீர்மானங்களிற்கு உள்ளீடுகளை வழங்குவதற்கு அரசாங்க கொள்கை உருவாக்கம் மற்றும் சந்தர்ப்பங்களில் குடிமக்களின் குரல் எழுப்புவதால் இந்த உறுதிமொழி **பொது பங்கேற்பினை** முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | காலநிலை மாற்றத்திற்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக செல்வாக்கும் செலுத்தும் SDG 13மற்றும் ஏனைய இலக்குகளை அடையாளப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மொன்ரியல் நெறிமுறை மற்றும் நடவடிக்கைத் திட்டங்களின் கீழுள்ள அனைத்துத் தேவைகளை இலங்கை பூர்த்தி செய்துள்ளது.<br>காலநிலை மாற்ற அச்சுறுத்தலுக்கான உலகளாவிய எதிர்வினையை வலுப்படுத்தும் பாரிஸ் பிரகடனத்தையும் இலங்கை கையெழுத்திட்டு, |

| | |
|---|---|
| | ஏற்புறுதி செய்துள்ளது.<br>2005ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் நடைமுறைப்படுத்தல்: இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது மற்றும் முன்னிறுத்துகின்றது. *நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும் மூலோபாய வழி* மற்றும் *தொலைநோக்கு 2025 வரைபுநகலில்* பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள்<br>நிலையான அபிவிருத்திக்கு நீல பச்சை அபிவிருத்தி மூலோபாயம்? |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. காலநிலை மாற்ற உள்வாங்கல் மற்றும் தணித்தலை அடையாளப்படுத்துவதற்கு மேம்படுத்த வேண்டிய இடைவெளிகள் மற்றும் பகுதிகளை அடையாளங் காண்பதற்கு தற்போதுள்ள தேசிய சுற்றுச்சூழல் கொள்கையை மீளாய்வு செய்வதற்கு பரந்தளவு பங்குதாரர் கலந்தாய்வுகளை முன்னெடுத்தல். | ஒக்டோபர் 2018 | டிசம்பர் 2018 |
| 2. பங்கேற்பு முறையில் காலநிலை மாற்ற அம்சங்களை முழுமையாக அடையாளப்படுத்தும் புதிய தேசிய சுற்றுச்சூழல் கொள்கை ஒன்றை உருவாக்கல். | ஜனவரி 2019 | டிசம்பர் 2019 |

| **தொடர்புத் தகவல்கள்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | திரு.மகிந்த குணரத்ன |
| பதவி நிலை, திணைக்களம் | | பணிப்பாளர் (கொள்கைத் திட்டமிடல் மற்றும் இயக்கம்), மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு |
| மின்னஞ்சல், தொலைபேசி | | Email : pmgun@gmail.com<br>தொலைபேசி : 01122034150 கையடக்க தொலைபேசி: 0715861297 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | சுற்றாடல் அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்கள், வளிமண்டலவியல் திணைக்களம், இடர் முகாமைத்துவ நிலையம், கொள்கைக் கற்கைகள் நிறுவகம் |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | சம்பந்தப்பட்ட சமூக நிறுவனங்கள் |